தூரம் செல்கின்றது. மேலே குறிப்பிட்ட இந்த இரண்டு சாலைகளும் சுருளியாறு நீர் மின் திட்டத்தின் கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்காக தமிழ்நாடு மின்சார வாரியத்தால் காப்புக் காட்டின் உள்ளே 10 கிலோ மீட்டர் தூரத்திலும், காப்புக் காட்டின் வெளியே 3 கிலோ மீட்டர் தூரத்திலும் 1972 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டு தமிழ்நாடு மின்சார வாரியத்தின் பயன்பாடு மற்றும் பராமரிப்பில் உள்ளது. எனினும், இந்தச் சாலையைச் சீரமைக்க அனுமதி வேண்டி தமிழ்நாடு மின்சார வாரியத்திடமிருந்து வனத் துறைக்கு கருத்துரு ஏதும் இதுவரை பெறப்படவில்லை. அவ்வாறு கருத்துரு பெறப்பட்டால், மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலோடு உரிய ஆய்வுக்குப் பின்னர், தேசிய வன உயிரின வாரியம் மற்றும் உச்ச நீதிமன்றத்தின் அனுமதியைப் பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 270, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பீம்ராவ், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

270—

ஆரம்ப சுகாதார நிலையம்

***48912—திரு. க. பீம்ராவ்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரவாயல் தொகுதி, அயப்பாக்கம் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை மிகப் பணிவோடு வணங்குகிறேன். மக்கள்தொகை மற்றும் இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு இடையே உள்ள தூரம் ஆகியவை

2015 செப்டம்பர் 15]

விதிமுறைகளுக்குட்பட்டு இல்லாததால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியிருக்கின்ற அயப்பாக்கம் ஊராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பீம்ராவ் அவர்கள்.*

திரு. க. பீம்ராவ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போரூரில் ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கிறது. அது அரசால் மேம்படுத்தப்பட்டு, மாநகராட்சி எல்லைக்குள் இருக்கிறது. அயப்பாக்கம் 47,000 மக்கள்தொகை கொண்ட ஓர் ஊராட்சியாகும். அருகில் இருக்கக்கூடிய அடையாளம்பட்டு, வானகரம் போன்ற ஊராட்சிகளில் உள்ள மக்கள்தொகையையும் சேர்த்தால் அப்பகுதியில் ஒன்றரை இலட்சத்திற்கும் மேல் மக்கள் தொகை இருக்கும். சுகாதாரத் துறையில் தமிழகமும், கேரளமும் முன்னணியில் இருக்கக்கூடிய மாநிலங்களாகும். எனவே, அந்தப் பகுதியில் ஒன்றரை இலட்சம் பேர் இருப்பதனாலும், போரூருக்கும், அயப்பாக்கத்திற்கும் இடையே இருக்கிற* distance *7, 8 கிலோ மீட்டர் இருப்பதாலும் அங்கே ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தால், அங்குள்ள முதியவர்களும், பெண்களும் மேலும் பயனடைவார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று பரிசீலிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த 4 ஆண்டுகளிலே மட்டும் 180 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களை (மேசையைத் தட்டும் ஒலி) ரூ.138.12 கோடி செலவிலே தொடங்கியுள்ளார்கள். அதுமட்டுமல்லாமல், 122 ஆரம்ப சுகாதார நிலையங்களை 30 படுக்கைகள்கொண்ட மேம்படுத்தப்பட்ட மருத்துவமனைகளாகவும் மாண்புமிகு அம்மா அவர்கள் உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள்.*

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

அயப்பாக்கம் ஊராட்சியிலுள்ள மக்கள்தொகை குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பீம்ராவ் அவர்கள்.*

திரு. க. பீம்ராவ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசென்று, 181-வது ஆரம்ப சுகாதார நிலையமாக அமைத்துத் தருமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. விதி 110-ன்கீழ் அறிக்கைகள்

(அ) வீட்டு வசதி வாரியம் மற்றும் குடிசை மாற்று வாரியம்மூலம் புதிய குடியிருப்புகள் கட்டுதல், பழுதுபார்த்தல், மதுரையில் குடிசைப் பகுதியினருக்கு வீடுகள் கட்டுதல், சென்னையில் உலகத் தரத்தில் மத்திய சதுக்கம் அமைத்தல், பலமாடிக் கட்டடங்களில் சூரிய மின் சக்தி அமைப்புகள் நிறுவுதலை அவசியமாக்கல், எர்ணாவூரில் சரக்குந்து வாகன நிறுத்துமிடம் அமைத்தல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கைகள் அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.*